செ.வெ.எண்.63 நாள்.28.03.2017.

திருநெல்வேலி மாவட்டத்தில் 2017–2018ம் ஆண்டிற்கான ரூ.8065 கோடி கடன் திட்ட அறிக்கையினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் வெளியிட்டார்கள்.

--------

திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்ட அரங்கில், மாவட்ட முன்னோடி வங்கியான இந்தியன் ஓவர்சீஸ் வங்கி மற்றும் மாவட்ட வங்கிகள் ஒருங்கிணைப்பு குழு சார்பாக திருநெல்வேலி மாவட்டத்தில் 2017–2018ம் ஆண்டிற்கான ரூ.8065 கோடி கடன் திட்ட அறிக்கையினை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் இன்று (28.03.2017) வெளியிட்டார்கள்.

கடன் திட்ட அறிக்கையினை வெளியிட்டு, மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது–

திருநெல்வேலி மாவட்டத்தில் 2017–2018ம் ஆண்டுக்கான கடன் திட்ட அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. கடன் திட்ட அறிக்கை மாவட்டத்தின் அனைத்து வங்கிக் கிளைகளில் இருந்து பெறப்பட்ட ஆண்டு கடன் திட்ட அறிக்கைகள் மற்றும் நபார்டு வங்கியின் சாத்தியமான கடன் திட்ட அறிக்கை (2017–2018) மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது. மத்திய, மாநில அரசு திட்டங்களை அடிப்படையாகக் கொண்டும் கடன் வழங்க இத்திட்ட அறிக்கையில் வழி வகைகள் செய்யப்பட்டுள்ளது. திட்ட அறிக்கையின்படி, கடந்த ஆண்டை விட கூடுதலாக 15% கடன் வழங்க திட்டமிடப்பட்டுள்ளது. கடன் திட்ட அறிக்கையில் விவசாயத்திற்கு ரூ.5860 கோடியும், சிறு, குறு மற்றும் நடுத்தர தொழில் துறைக்கு ரூ.495 கோடியும், ஏற்றுமதிக்கு ரூ.60 கோடியும், கல்விக் கடனுக்கு ரூ.245 கோடியும், வீட்டு கடனுக்கு ரூ.350 கோடியும், புதுப்பிக்கத்தக்க ஆற்றல் சக்தி துறைக்கு ரூ.100 கோடியும், சமூக உள்கட்டமைப்பு துறைக்கு ரூ.55 கோடியும், இதர துறைக்கு ரூ.900 கோடியும், ஆக மொத்தம் ரூ.8065 கோடி கடன் வழங்க இலக்கு வகுக்கப்பட்டுள்ளது.

கடந்த ஆண்டில் (2016–2017) ரூ.7050 கோடி அளவிலான கடன் வழங்கிட இலக்கு நிர்ணயிக்கப்பட்டது. இதில் விவசாயத்திற்கு மட்டும் ரூ.5720 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டது. கடந்த ஆண்டு மழை பொய்த்ததன் காரணமாக டிசம்பர் வரை ரூ.3420 கோடி வரை வழங்கப்பட்டுள்ளது. இதுவரை 75 சதவிதம் இலக்கு எய்தப்பட்டுள்ளது. இந்த ஆண்டு விவசாயத்திற்கென ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூ.5860 கோடி முழு இலக்கினையும் வழங்கிட நடவடிக்கை எடுக்கப்படும் என மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர் மு.கருணாகரன்,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார்கள்.

இந்நிகழ்ச்சியில், இந்தியன் ஓவர்சீஸ் வங்கி முதன்மை மண்டல மேலாளர் திரு.சுசில் சந்திர மொகந்தா, ரிசர்வ் வங்கி உதவி பொது மேலாளர் திரு.ஏ.ராம்குமார், நபார்டு வங்கி உதவி பொது மேலாளர் திரு.கே.ராமலிங்கம், முன்னோடி வங்கி மேலாளர் திரு.எஸ்.அழகர்சாமி, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் திரு.ஆ.பழனி, மகளிர் திட்ட இயக்குநர் திருமதி.கெச்தி லீமா அமலின், மாவட்ட தொழில் மைய பொது மேலாளர் திரு.ஞானசேகரன் உள்பட அரசு அலுவலர்கள், வங்கி மேலாளர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.